DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Proceedure)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 84/2020

Miscellaneous :

Sessions : PW1

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் குவிமுச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | எழிலரசன் |
| Father / Husband Name | ராஜாராம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 22.04.2024

**குறுக்கு விசாரணை:**

**1.** நான் எதிரிக்கு எதிராக கொடுத்த மனு பற்றியும் நிரூபண வாக்குமூலம் பற்றியும் எனக்கு முழு விவரமும் தெரியும் என்றால் சரிதான். தற்போது வழக்கில் நடந்துகொண்டிருக்கும் குறுக்கு விசாரணை பற்றியும் வழக்கு விவரம் பற்றி தெரியும் என்றால் சரிதான். எனக்கு ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியும் பெயர் விலாசம் ஆங்கிலத்தில் எழுதப்படிக்க தெரியும். எனக்கு தமிழை தவிற வேறு மொழி தெரியாது என்றாலும் எனக்கு தமிழில் தான் கையொப்பம் போட தெரியும் என்றாலும் சரியல்ல. நான் ஆங்கியலத்தில் தான் கையொப்பம் செய்வேன். என்னிடம் கொடுக்கப்பட்ட வெள்ளை தாளில் எனது பெயர் மற்றும் விலாசத்தை ஆங்கிலத்தில் எழுத முடியுமா என்றால் முடியும். ராஜவேல் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவரை நிலம் வாங்குவதற்கு முன் இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்தே தெரியும்.

2. ராஜவேல் டிரேவல்ஸ் தொழில் செய்வது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ராஜவேல் தெரியும் காலத்தில் அவர் என்ன தொழில் செய்தார் என்றால் அதை நான் அவரிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. ராஜவேல் என்பவரை விட விஜயராகவன் என்பவரை எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. விஜய ராகவன் என்பவரை தெரியாது. நான் தற்போது பொய் சொல்கிறேன் என்றாலும் விஜயராகவன் என்பவர் என்னை தெரியும் என்று சொல்லியுள்ளார் என்றாலும் சரியல்ல. ராஜவேல் என்பவரை நிலம் விவரம் முன்பே எனக்கு தெரியும் என்றாலும் அவரை தெரிந்ததால் தான் அவரிடம் நிலபறிமாற்றம் சம்மந்தமாக பழகினேன் என்றாலும் சரியல்ல. எனக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. நான், ராஜவேல் மற்றும் விஜயராகவன் ஆகியோர் அடிக்கடி சேர்ந்து மது அருந்துவோம் என்றால் சரியல்ல.

3. என்னிடம் காட்டப்படும் மசாஆ.1 பத்திரம் ஒன்று தான் உள்ளதா என்றால் ஆமாம். என்ன காரணத்திற்காக ஒரே தாளில் சுருக்கி சுருக்கி விவரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் விவரம் குறைவாக இருப்பதால் ஒரே பத்திரத்தில் எல்லா காசோலை பற்றியும் பதிவு செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 2708000/- தொகை சம்மந்தமாக

சம்மதம் பத்திரம் என்பதால் நான் இரண்டு தாள்களாக பயன்படுத்தியிருக்க வேண்டும் நான் மோசடியாக மேற்படி ஆவணத்தை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மசாஆ.1 பத்திரத்தில் இரண்டு சாட்சி கையொப்பங்களில் ஒருவர் பாஸ்கரன் மற்றொருவர் யார் என்று தெரியவல்லை. ரூபாய் 2708000/– கிரைய பத்திரத்திற்கான சம்மத பத்திரத்தில் ஏன் சாட்சி கையொப்பங்களின் பெயர் மற்றும் விலாசம் எழுதப்படவில்லை என்றால் மறந்துவிட்டேன். மசாஆ.1 பத்திரத்தில் கீழ்கண்ட சொத்து விவரம் என்ற வரி உள்ளது. ஆனால் சொத்து விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தை மகாலட்சுமி என்னிடம் கொடுத்த காசோலைக்காக வாங்கினேன்.

4. மசாஆ.1 பத்திரத்தில் எதிரி என்னிடம் ரூபாய் 50 ஆயிரம் கொடுத்ததாக குறிப்பு உள்ளது. மேற்படி பணத்தை எவ்வாறு கொடுத்தார்கள் என்றால் ரொக்கமாக கொடுத்தார். மசாஆ.1 பத்திரத்தில் எனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். எதிரி மசாஆ.1 பத்திரத்தில் போட்ட கையொப்பத்தில் எந்த தேதியும் கையொப்பத்துடன் சேர்ந்து போடவில்லை என்றால் பத்திரத்தில் ஆரம்பத்தில் தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. எந்த நம்பிக்கையின் அடிப்படையில் நான் நிலத்தை எழுதி கொடுத்தேன் என்றால் எதிரி ஹவுசிங் போடில் வேலை செய்து லோன் பெற்று பணத்தை தருகிறேன் என்று சொன்னதன் அடிப்படையில் கொடுத்தேன். மேற்படி பத்திரத்தின் படி ஒரு மாத காலத்தில் மீதி தொகையான ரூபாய் 26,58,000/– தொகையை தருவதாக எதிரி சொன்னதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. மேற்படி பத்திரத்தின் தேதியாது 11.09.2017 ஆகும். அதிலிருந்து ஒரு மாத காலமானது 11.10.2017 என்றாலும் நான் 30.01.2020 ல் காசோலை பெற்றேன் என்றாலும் சுமார் 3 வருடகாலத்தில் என்னானது என்றாலும் நான் நேரில் சென்று கேட்டேன். அப்போது 11.06.2018 ல் 122801 என்ற காசோலையை கொடுத்தார். அதை நான் செலுத்திய போது வங்கியில் திருப்பப்பட்டது. மீண்டும் எதிரியிடம் கேட்டதற்கு மொத்தமாக பணமாக தருவதாக கூறினார். அதன் பிறகு அவர் எங்கு சென்றார் என்று தெரியவில்லை. சேலத்தில் இருந்ததாக கேள்விப்பட்டு அங்கு சென்று பார்த்தேன். வீட்டை பூட்டிவிட்டு சென்றுவிட்டார்கள். பின்னர் ஊட்டியில் இருந்ததை தெரிந்து வழக்கின் வாரண்டை சென்று கொடுத்தேன். நான் கொடுத்துள்ள வழக்கு மனுவிற்கும் மேற்படி விளக்கத்திற்கும் முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல.

6. மனுவில் பாரா 4 ல் மகாலட்சுமி கூறியதன் பெயரில் ரூபாய் 7 லட்சத்திற்கான 122800 காசோலையை வங்கியில் செலுத்தியதாக கூறியுள்ளேன் என்றாலும் தற்போது முரண்பட்டு சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி என்னிடம் போன் மூலம் டிசம்பர் 2020 ம் வருடத்தில் டிசம்பர் இருதியில் காசோலையை செலுத்துமாறு சொன்னதன் அடிப்படையில் நான் செலுத்தினேன். நான் மனுவில் எதிரி என்னிடம் ரூபாய் 5 லட்சம் கொடுத்துவிட்டு காசோலை எண் 122800 வை பெற்றுக்கொண்டார் என்று சொல்லியுள்ளது உண்மையா என்றால் உண்மைதான். மேற்படி தொகையை எப்போது எதிரி என்னிடம் கொடுத்தார் என்றால் சுமார் 11.10.2017 வருட காலத்தில் கொடுத்தார். வேறொரு காசோலையை பற்றி ஏன் மனுவில் சொல்லவில்லை என்றால் எதிரி என்னிடம் மொத்தமாக பணமாக கொடுக்கிறேன் என்று சொன்னதால் அதை பற்றி வழக்கு போடவில்லை.

7. காசோலை 122800 எதிரியிடம் திருப்பி கொடுக்கப்பட்டது என்றாலும், 122801 வங்கியில் திருப்பப்பட்டது என்றாலும் 122802 இந்த வழக்கு காசோலை என்றாலும் இதை தவிர என் கையில் எத்தனை காசோலைகள் உள்ளது என்றால் இரண்டு காசோலைகள் உள்ளது. அதில் 122803 மற்றும் 122804 ஆகும். மொத்தம் 5

காசோலைகள். 122800 என்ற காசோலை 5 லட்சத்துக்கு என்றாலும் 122801 எவ்வளவு தொகைக்கானது என்றால் 7 லட்சத்துக்கான காசொலை ஆகும். 122803 காசோலை 7 லட்சத்துக்கு உரியது. 122804 காசோலை மீதி பணத்திற்கு உரியது. எவ்வளவு என்று கணக்கு போடவில்லை. 122804 காசோலை பணம் லட்சங்களில் உள்ளது. நான் பொய் சொல்கிறேன் என்றாலும் மற்ற 4 காசோலைகளுக்கான தொகைகளை சேர்த்தால் 26 லட்சம் வருகிறது என்றாலும் நான் ரூபாய் 50 ஆயிரம் ஏற்கனவே முன் தொகையாக பெற்றுள்ளேன் என்றாலும் எனவே 5 வது காசோலையின் தொகை அயிரங்களில் இருக்கவேண்டும் என்றால் சரியல்ல. சரியாக தெரியவில்லை. கணக்கு போட்டால் தான் தெரியும்.

8. என்னிடம் எத்தனை காசோலைகள் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் 4 காசோலைகள் என்று உறுதியாக தெரியும். 5 வது காசோலை குறித்து ஞாபகம் இல்லை. அதில் உள்ள தொகை குறித்தும் ஞாபகம் இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில், நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலும் 5 காசோலைகள் பற்றி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தற்போது 5 வது காசோலை குறித்தும் சரியாக தெரியவில்லை என்றால் 5 காசோலைகள் தான் தொகை குறித்து மட்டும் ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டி பத்திரத்தை பொறுத்து கேட்கப்பட்ட பத்திரத்தை காசோலைக்காக கொடுக்கப்பட்டது என்று சொன்னேன் என்றாலும் காசோலையின் விவரங்கள் அதில் குறிப்பிட்டுள்ளதாக சொன்னேன் என்றாலும் சரிதான். மேற்படி பத்திரத்தின் படி 122800 முதல் 122803 வரையிலான 4 காசோலைகள் கூறப்பட்டுள்ளது. 122804 என்ற காசோலை குறித்த விவரம் இல்லை என்றால் சரிதான்.

9. என்னிடம் காட்டப்படும் மசாஆ 2 காசோலை தான் எதிரி என்னிடம் கொடுத்ததாக சொல்லப்படும் காசோலை என்றால் சரிதான். எதிரி அதனை கொடுக்கவில்லை என்றாலும் ராஜவேல் என்பவர் தான் என்னிடம் கொடுத்தார் என்றாலும் சரியல்ல. மேற்படி காசோலையில் எதிரி கையொப்பம் மட்டும்தான் செய்தார் என்றாலும் மற்ற விவரத்தை நான் நிரப்பினேன் என்றாலும் சரியல்ல. தேதி மட்டும் போடாமல் மற்ற விவரம் அனைத்தையும் நிரப்பி எதிரி என்னிடம் கொடுத்தார். அவர் சொன்னதன் பேரில் தேதியை நிரப்பி நான் வங்கியில் செலுத்தினேன். தேதியுடன் சேர்ந்து என் பெயரையும் நான் அதில் எழுதினேன் என்றால் சரியல்ல. தேதியில் எழுதப்பட்டுள்ள பேனாவின் மையும் பெயருக்கு எழுதப்பட்ட மையும் ஒன்றாக உள்ளது என்றால் சம்மதம் பத்திரம் கொடுக்கும் போது காசோலையை கொடுத்து என் பெயரையும் எழுதச் சொன்னார்கள் அதன் படி செய்தேன். நான் முன்னுக்கு பின் முரணாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10. சம்மதம் பத்திரம் கொடுத்த உடன் காசோலையில் என் பெயரை எழுதிகொண்டேன். தேதியை எதிரி சொன்ன பிறகு எழுதினேன். நான் ஒரே நேரத்தில் என் பெயரையும் தேதியையும் சேர்த்து எழுதினேன் என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள பண விவரத்தையும் கையொப்பத்தையும் எதிரி போட்டு கொடுத்தார் என்றால் சரிதான். பண விவரம் நிரப்பப்பட்ட மையும் எதிரியின் கையொப்பம் செய்த மையும் வேறு பேணாவால் போடப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிதான் இரண்டையும் போட்டார். பண பறிமாற்றம் சம்மதம் பத்திரங்கள் அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல. நிலம் சம்மந்தமாக ஆவணம் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் காசோலை வழக்கு என்பதால் செய்யவில்லை. அந்த ஆவணங்கள் செங்கல்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

11. நானும் விஜயராகவனும் சேர்ந்து ராஜவேலுவை ஏமாற்றி அவரது மனைவி மகாலட்சுமியிடம் இருந்து காசோலையை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு நிலம் சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றாலும் நான் எதிரியை பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. விஜயராகவன் என்பவர் என்னை வழிநடத்தி இந்த வழக்கை என் மூலம் தாக்கல் செய்ய வைத்துள்ளார் என்றால் சரியல்ல. விஜயராகவன் கொடுத்த தகவலின் பெயரில் தான் நான் எதிரியை ஊட்டியில் சென்று பார்த்து வாரண்ட் கொடுத்தேன் என்றால் சரியல்ல.